96

1

The Registrar of Books,
Madras 6.

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமை குருகுலத் தாள்

முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—ரு | குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, பங்குனி ; 23—3—51. | தளிர்—உரு

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று."

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

96/2·51

திருமுறைச் செய்கை

முன்னோர் செய்த நன்மைகள் பல; அவற்றில் நூல்களைத் தொகுத்து முறைப் படுத்துதலும் ஒன்று. இந்த வழக்கம் நீண்ட நாளாகவே இருந்துவருகின்றது.

பல ஆயிரம் ஆண்டுகளாக எழுந்த பாடல்களையும் நூல்களையும், சங்க காலத்தின் கடைசியில் விளங்கிய பெரியோர், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு, ஐம்பெருங் காப்பியம் என முறைப்படுத்தித் தொகையாக்கி உதவினர். இதனால், அந்தப் பாடல்களும் நூல்களும் சிதறாமல் காக்கப்பெற்றன; அவற்றின் பெருமையும் விளங்கிற்று.

பின் எழுந்த 'தேவாரம்' 'திருவாசகம்' போன்ற அருட் பாடல்களையும் நூற் பகுதிகளையும் அங்ஙனமே திருமுறைகள் எனப் பின் எழுந்த பெரியோர் முறைப் படுத்தி அளித்தனர்.

காலந்தோறும் இப் பணி நடைபெற்று வருதல் வேண்டும். நாட்டு மக்களின் நாகரிகச் சித்திரமே இலக்கிய இலக்கண அருள் நூல்கள்! அவற்றை முறைப்படுத்திப் பாராட்டுதலும் ஒரு நாகரிகப் பண்பாகும்.

முருகவேள் அருள் நூல்களும் அருட் பாடல்களும் பல்லாயிரம் ஆண்டுகளாகவே தமிழ் நாட்டில் தோன்றி வருகின்றன. ஆசிரியர் நக்கீரர் முதலிய சிறந்த ஆசிரியர் பலரின் அருட் பணிகளாக அவை திகழ்கின்றன. அருணகிரியார் காலத்தில் அவை வெள்ளமாய்ப் பெருகின.

இத்தகைய அரிய முருகவேள் பாடல்கள் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகிய இன்றுவரையில் ஒரு முறைப்படுத்தித் தொகுக்கப் படாமல் இருக்கின்றன. சிதர்ந்த நிலையிலேயே ஆங்காங்கும் பற்பல வடிவுகளில் பற்பல வகைகளில் வழங்கி வருகின்றன. முருகவேள் அன்பர்கள் பெருகிவரும் இக் காலத்தில் இக் குறை நீங்கப் பெறுதல் நன்றாகும்.

"ஆசிரியர்"

'நற்றிணை' அழகு

[R. G. பிள்ளை B. A.]

அகத்துறை நூல்களிற் சிறந்த தெனக் கருதப்படும் நற்றிணை, பொருட்செறிவும், கவிதைச் சுவையும் விரவிய செந்தமிழ்ப் பாக்களால் ஆயதொரு நூல்.

நற்றிணையில் அதியமான் நெடுமானஞ்சியைப் புகழ்ந்து ஔவையார் பாடிய பின்வரும் அகவற்பா, உவமையழகும் பொருளழகும் மிகுந்து கற்பவர் உள்ளத்தை உருக்கும் கனிவும் பெற்றுள்ளது. அச்செய்யுள், கார்காலத்துத் திரும்புவே னென்று கூறிப்போந்த தலைவன் குறித்த காலத்தில் வாராமை கண்டு, பிரிவாற்றாளாய்ப் பேதுறுகின்ற தலைவியின் நிலையைச் சித்தரிக்கும் கருத்தோவியமாகத் திகழ்கின்றது.

"அருந்துய ருழத்தலி னுண்மை
சான்மெனப்
பெரும்பிறி தின்மையி னிலேனு
மல்லேன்
கரைபொரு திழிதருங் கான்யாற்
றிகுகரை
வேர்கிளர் மாஅத் தந்தளிர் போல
நடுங்க லானா நெஞ்சமொ டிடும்பை
யாங்கனந் தாங்குவென் மற்றே
யோங்குசெலற்
கடும்பகட் டியானை நெடுமா னஞ்சி
யீர நெஞ்ச மோடிச் சேண்விளங்கத்
தேர்வீ சிருக்கை போல
மாரி யிரீஇ மான்றன்றால் மழையே"

குறிப்பு :— சான்மென - சாலுமென, இகுகரை - இடிகரை, மாஅத்து - மாமரத்து, மான்றன்றால் - மயக்கம் அன்றால். [மான்று - மயக்கம்].

தலைமகன் வினைவயிற் பிரிந்தான். பிரிந்து செல்வுழி, கார் காலத்துத் திரும்புவே னென்று தலைவியிடம் கூறிச் சென்றான். கார் காலமும் வந்து விட்டது. ஆனால், சென்ற தலைவன் திரும்பாமையால் தலைவி வருந்துகின்றாள்.

கருமேகங்கள் திரண்டு மழை பொழிய ஆரம்பித்தது. கனமழை ஓயாது பெய்கிறது. மயக்க மென்பதே அம் மழையிடத்தில்லை. ஓயாப் பெருமழை, ஒசிந்த வுள்ளத்தளாகிய தலைவியையும் சிந்திக்கத் தூண்டுகிறது.

ஓயாது பொழிந்த மழை, தலைவிக்கு, வரையாது கொடுக்கும் வள்ளலாகிய நெடுமானஞ்சியை நினைவூட்டுகிறது. நெடுமானஞ்சி, சிறந்த வள்ளல். ஆற்றுநர்க் களித்து அறவிலை பகரும் இழிதகையோரின் குழுவினைச் சேர்ந்தோனல்லன் அவன். ஈர நெஞ்சத்தையுடையவன். நால் வகைச் சேனைகளையுமுடைய வீரன். ஈர அன்பினர் வீரம் விளம்புந் தகையதல்லவே. நெடுமானஞ்சியிடம் களிற்றியானை ஈட்டம் மிகுந்திருந்தது. ஆனால் அவன் இரவலர்க்குப் பரிசாக அளித்தவை தேர்களாகும். தான் ஈர நெஞ்சத்தானென்பது நெடுந்தூரம் நீண்டகாலம் விளங்கவேண்டுமென்றே நெடுமானஞ்சி பரிசில் வழங்கினன், கைம்மாறுகருதி யன்று. தேர்களை இரவலர்க்கு வீசி அவனிருந்த நாளோலக்கம்போல மேகம் மழையை வீசிற்று.

தலைவி சிந்திக்கிறாள். "கார்காலம் வந்தும் தலைவன் வரக்காணேன். எத்துணைக்காலம் யானவன் வருகையை எதிர் நோக்கி நிற்பேன். என் உள்ளமோ ஒடிந்து விட்டது. படருவதற்குக் கொழுகொம்பின்றித் தவிக்கும் கொடியைப் போல் என்னுயிர் ஊசலாடுகின்றது. இந் நிலையில், நான் இருந்தேனா, இறந்தேனா வென்றுங் கூட ஐயுறுகின்றேன். தாங்குதற்கரிய துன்பத்தைத் தாங்கி வருந்துகின்றேனாதலால் நான் உயிருடனிருக்கின்றேன் என்பது பொருந்தும். உயிர் போகமாட்டே னென்கிறது. தலையன்பு என்னிட மிருக்குமானால், குறித்த காலத்தில் தலைவனைக் காணாவிடத்து என்னுயிர் போயிருக்க வேண்டும். நானின்னுஞ் சாகவில்லையாதலால், என்னிடத் தன்பில்லையென்பது பெறப்பட்டது. அப்படியுமில்லையே. தலைவன்பா லுள்ள அன்பு மிகுதியன்றோ என்னை இப்படி வாட்டுகின்றது. ஆயின், என்னிடத் தன்புண்டு, உயிரு முண்டென்பது எப்படிப் பொருந்தும்?

அதோ அந்தக் கான் யாற்றில் வெள்ளம் கரைபுரண் டோடுகிறது. அலைகள் இருமருங்கும் கரைகளை மோதிச் செல்வதால் சிற்சில விடங்களில் கரை இடிந்து விட்டது. இடிகரையில் நிற்கும் மாமரத்தின் வேர்களை வெள்ள நீர் கிளறி விட்டது. மரம் அசைந்தாடுகிறது. அம் மரத்திலுள்ள அழகிய மாந்தளிர் நடுங்குகிறது. அம் மாந்தளிரைப் போல என் நெஞ்சமும் நடுங்குகிறது. நடுக்கம் நீங்காத இவ்வுள்ளத்துடன் நான் எவ்வளவு காலம் பிரிவுத் துன்பத்தையும் காம நோயையும் தாங்க முடியும். இதுதான் காமத்தியற்கைபோலும்." எனக் கலங்காநின்றாள்.

கான்யாற்று வெள்ளம் தலைவியின் பிரிவுத் துன்ப வெள்ளம் அல்லது காம வெள்ளத்திற் குவமை. இடிகரை தலைவியின் பெண்மைக் குவமை. மாமரம் தலைவியின் உடலுக்குவமை. மாந்தளிர் அவள் நடுங்கும் நெஞ்சத்திற்குவமை. இவ் வுவமைகளையும் செய்யுட் பொருளையும் அறிஞர் ஆராய்ந்து இன்புறுவாராக.

- உயர்ந்த -
வைரங்கள்
சவரன் பொன் நகைகள்
அசல் வெள்ளி
சாமான்கள்
உத்தரவாதமுள்ளவை
S. சாமிநாத அய்யர் & சன்ஸ்
111, நேதாஜி போஸ் ரோடு,
சென்னை 1.
"Silver Medals & Prize Cups
are always available for Sale"
— GUARANTEED —
JEWELLERY HOUSE

காவிரி தோன்றிய இடம், மேற்கு மலைத் தொடரில் 'சையமலை' என்னும் பகுதியில்; அதனால் அந்த ஆறு தலைமை பெற்றதாயிற்று. நிலமகட்குச் செவிலித்தாயாய் நின்று, அவள் குழந்தைகளாகிய உயிர்கள் பலவற்றையும் வளர்த்து, பின்னும் பின்னும் அவற்றிற்கு நீர் சுரந்து வழங்கி ஊட்டி வருகின்றது.

பொன்னி யென்று காவிரிக்கு மற்றொரு பெயர் உண்டு. அது பெருகி வரும் இடம் தங்கவயலாய் இருக்கின்றது.

பொன்னியாறு, உலகு படைப்போனையும், கங்கையையும், உமையம்மையின் உள்ளக் கருணையையும், இறைவனுக்கு அன்பரையும் போல் உலகுக்குத் தொண்டு செய்து வருகின்றது.

மலருந் தாமரை மலர் மேல் காவிரிக் கால் பெருக்கெடுத்துப் பாய்கின்றது; பல உயிர்களைத் தனது செழுமையாற் படைக்கின்றது; அங்கங்குங் கமண்டலம் போன்ற குளங்களோடு தொடர்பு கொண்டு, தாங்கிச் செல்கின்றது. இவ்வாற்றால், தாமரைமேல் தோன்றுதலும், உலகுயிர்களைப் படைத்தலும், கமண்டலம் தாங்குதலும் உடைய நான்முகனைப் போல் காவிரி யாறு காட்சி தருகின்றது.

மற்றொரு வகையால் நோக்கும் போது, மதி உலாவும் மலையுச்சியி லிருந்து காவிரி இறங்கி வருதலால், அது, நிலவு சூடிய இறைவன் திருமுடிமே லிருந்து ஒழுகும் கங்கையையும் ஒத்துத் திகழ்கின்றது,

அன்றியும், காவிரியின் ஒழுக்கத்தை இறைவனோடு ஒரு பாதியாய் நின்று ஆளுகை புரியும் உமை யம்மையின் திருவுள்ளத்திற் பெருக்கெடுக்குங் கருணை யொழுக்கம் என்றே கூறலாம்; ஏனென்றால், உமையம்மையும் மலையி லிருந்து தோன்றிய மலைமகள்; காவிரியும் மலையி லிருந்து தோன்றிப் பெருகும் பொன்னியாறு. உமையம்மையும் உலகத்தில் பல்வேறு அறங்களை வளர்ப்பவள்; காவிரியும் தனது வளத்தால் உலகத்தில் அறங்கள் பெருகக் காரணமாய்த் திகழ்வது.

பெரிய புராணம்

இன்னொரு பெருஞ் சிறப்பும் காவிரியைப் பற்றி எண்ணுந் தோறும் இன்பந் தருகின்றது. காவிரியின் வளத்தால், காவிரியின் இரு கரைகளிலும் நெடுக இறைவன் திருக்கோயில்கள் தோன்றி விளங்குகின்றன. அணுக்கத் தொண்டர்களைப் போல், மணமிக்க நறு மலர்களையும் நீரையும் தன் அலைக் கைகளால் வீசி அத் திருக்கோயில்களில் எழுந்தருளி யிருக்கும் ஆண்டவனை நாளும் வழிபாடு செய்துகொண்டு காவிரி செல்கின்றது.

காவிரியின் செய்கைகள் எண்ண எண்ண இங்ஙனம் எத்தனையோ வகைகளில் தோற்றம் அளித்து இன்பம் பெருக்கி நிற்கின்றது.

பொன்னியாறு தெளிவுடையதே யாயினும், அதனிடம் கலங்கலும் இல்லாமலில்லை. இரு கரைகளிலும் மங்கையர் நீராட வருகின்றனர். அவர்கள் உடம்பிற் பூசியிருக்குங் குங்குமச் சேறும் புனைந்திருக்குஞ் சந்தனச் சேறும் என்னும் மணக் குழம்புகள் காவிரி நீரிற் கலந்து அந் நீர் கலங்கலுடையதாய்த் தெளிவிழந்து போகின்றது.

இத்தகைய காவிரி, தன் கரைகளின் அளவில் மட்டுஞ் சென்று கடலிற் கலந்துவிடாமல், கிளை கிளையாகக் கால்கள் பரந்து அங்கங்குங் குளங் குட்டைகளை நிரப்பி அவற்றில் மலர்கள், வண்டுகளின் இசைக்கு உருகி இதழ் விரிந்து புதுமதுப் பொங்கும் அளவுக்குச் செழுமைதந்து பரவலாய் நாட்டுக்குப் பயன்பட்டுச் செல்கின்றது.

மதகுகளின் வாயிலில் நீர் கொப்புளித்துப் பெருகி வருதலைக் கண்டு அதனை வரவேற்கும் ஆரவாரத்தால் உழவர் கைகொட்டும் மகிழ்ச்சியொலி விண்ணுலகத்துக்கும் அப்பாற்சென்று கேட்கத் தக்கதாய்த் துறை தோறும் மிகுந்து நிற்கும். மீண்டு வாராப் பேரிடமாகிய வீடு பேற்றில் விளங்குவோரும், காவிரியின் வளந் தெரிந்து, 'காவிரி நாட்டுக்குச் சென்றால் மன்பதைக்குப் பயன்படக் கூடிய அறச் செய்கைகள் பல செய்யலாமே' என்று கடமை கருதும் அளவுக்கு அவர் செவிகளிலும் மள்ளர் ஆரவாரம் கேட்கின்றது.

காவிரி பரந்த இடம் முழுதும் நாறு பறிக்கும் மாதர் மாட்சியும், அந் நாறுகளை முடிமுடியாய்ச் சேர்க்கும் அவர் செய்கைச் சீரும், இன்னிசை எழுப்பி மகிழ்வுடன் ஏருழுது நிற்பார் ஒழுகலாறும் அன்பு மிகுக்குங் காட்சிகளாய் மலிந்து தோன்றும்.

சால் உழுது ஊறித் தெளிந்தபின் சேறு இழுதபோல் உள்ள வளமான கழனிகளில், மருத நிலத்தின் தெய்வமாகிய வேந்தன் எனனும் இந்திரனைத் தொழுது அங்கங்கும் நாறு நடுவார் கூட்டமே, பொய்யாத காவிரி நாட்டின் பரப்பெலாம் காட்சி யளிக்கும்.

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை 1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை 3	விகிருதி, பங்குனி 23-3-51 வெள்ளி	தளிர் 23

அரசியலும் – – சமயவியலும்

நன்மைமிக்க வாழ்க்கை நாகரிக வாழ்க்கை எனப்படும். அறிஞர்கள் இந் நாகரிகத்தை அகம் என்றும் புறம் என்றும் பிரித்து, அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை முதலிய நற்குணங்களில் உயர்ந்து நிற்பதை அக நாகரிகம் என்றும், நல்ல ஊண் தூயவுடை வசதியான இடம் இனிய நுகர் பொருள்கள் முதலிய நன்னிலைகளில் உயர்ந்து நிற்பதைப் புற நாகரிகம் என்றும் கூறுவர்.

புற நலங்களை வளர்த்துக் கொள்ள அரசியலும், அக நலங்களை வளர்த்துக் கொள்ளச் சமயவியலும் அறிவான் மிக்க சான்றோர்களால் வகுக்கப்பட்டன. அரசியலை அறிவியல் என்றும் சமயவியலை உணர்வியல் என்றும் வேறொரு வகையாகவும் விளக்கிக் கொள்ளலாம். ஆகவே, அவை யிரண்டும் தம்முள் முரண்பட்டன வாகாமல், ஒரே நோய்க்கு மேற்பூச்சு மருந்தும் உட்கொள்ளும் மருந்தும் போல மக்களின் வாழ்க்கை நலத்துக்கு உதவத் தக்கன என்று அறிதல் வேண்டும்.

காலம் இடம் சூழ் நிலைகளுக்கேற்ப அவ்வக் காலங்களில் அவ்வந் நாட்டில் சான்றோர்களும் அறிஞர்களும் பற்பலர் தோன்றிப் பல்வகைச் சமயத் துறைகளையும், அரசியல் முறைகளையும் வகுத்துச் சென்றனர். எனினும், அவற்றின் அடிப்படை உண்மைகள் என்றும் எவ்விடத்தும் ஒத்திருப்பதைக் காணலாம்.

அரசியலும் சமயவியலும் தத்தம் அளவில் எத்தனைப் பிரிவுகளை உடையவா யிருப்பினும் (மக்கள் சூழ்நிலை மன நிலைகளுக்கேற்ப அவை என்றும் பல்வகைக் கட்சிகளாகவும் மதங்களாகவும் பிரிந்தே இருக்கும் ஆதலின்) அவை நாட்டு மக்களின் அமைதிக்குப் பாதுகாப்பாகவும், முன்னேற்றத்துக்குத் துணையாகவும் இருக்கும்படி அவ்வத் துறைகளில் நின்று பணி செய்வார் பார்த்துக் கொள்ளவேண்டும்.

கட்சிகளோ மதங்களோ தமது வளர்ச்சியையே பெரிதாக எண்ணிச் செயலாற்றுமல் பொது மக்களின் நடக்கையிலும், கொள்கையிலும் கொதிப்பும் குழப்பமும் உண்டாகாத முறையில் அவர்களில் எத்திறத்தாரிடத்தும் இனிதே இயங்கவேண்டும்.

நிற்க, இன்று எங்கும் வாழ்க்கை நடப்புக்கு இன்றியமையாத ஊணும் உடையும் உறையுளும் பற்றுக்குறையாக இருப்பதனால் அவற்றை மிகுத்துக் கொள்ள உதவியாக இருக்கும் அரசியலிலேயே எழுத்தறிவுள்ள மக்களிற் பெரும்பாலோர் கருத்துச் செலுத்துகின்றனர். இது, இக்கால நிலைக்கு இயல்பே. ஆயினும், மக்களின் வாழ்க்கைச் சிறப்புக்குச் சான்றாக நிற்கும் சமயவியலே கூடாது என்றும் குரலும், அவ்வியலின் பேரால் நிகழ்ந்த, நிகழும், அட்டூழியங்களை எண்ணி எழுப்பப்படுகிறது.

இனி, அரசியல் என்னும் பேரால் பல்வேறு கட்சிக்காரர்களும் செய்யும் பொருந்தாச் செயல்களைப்பற்றி நாடோறும் செய்தித் தாள்களின் வாயிலாகவும் நேரிலும் அறிபவைகளை ஒட்டிப் பார்த்தால், இன்று சமயவியல் வேண்டாம் என்பதுபோல இன்னும் சிலகாலம் கழித்து அரசியலும் வேண்டாம் என்று ஒதுக்கும் நிலை வந்துவிடுமோ என்று ஐயுற நேர்கிறது.

இவ்வாறே வணிகம், கலை முதலிய பல துறைகளிலும், ஏன் செய்தித் தாள் துறையிலும் கூட இன்று நடைபெறும் இழி செயல்களை எண்ணிப் பார்க்கிறபோது இப்படியும் ஒரு நாகரிகமும் வாழ்வும் வேண்டுமா என்று கூடத் தோன்றுகின்றது.

என்றாலும், எவ்வியலாயினும் சரி. முதலில் அது தன் அடிப்படைக் கொள்கைகளில் நன்றாகவே இருக்கிறது என்றும், இல்லையேல் அது முகிழ்த்து நிற்பதற்கே ஏது வில்லை என்றும், அதைச் சார்ந்து நின்று பணி செய்வோரே அதன் வளர்ச்சி நிலையிற் றன்னலத்தால் ஊழல்களைப் பெருக்கி இறுதியில் அவ்வியலுக்கே முடிவு கட்டிவிட வேண்டும் என்கிற சூழ்நிலையை உண்டாக்கி விடுகின்றனர் என்றும் நுணுகிப் பார்த்தால் தெரிகின்றது.

ஆகவே, மன்பதைத் தொண்டில் உண்மைக் கருத்துடையார் கடமை, எல்லா இயலையும் தழுவி நின்று, தம் நிலைக்கேற்ற துறைகளில் சிறந்து சென்று அவற்றுள் முரண்பட்டன போலத் தோன்றுகின்ற சூழ் நிலையில் வளர்க்கப் பட்டுள்ள வற்றின் அடிப்படை உண்மைகளை எடுத்துக் காட்டி மக்களை ஒற்றுமைப் படுத்தி, அவரவர் போக்குகட்கும், நிலைகட்கும் ஏற்ற துறைகளில் அவர்களை ஈடுபடுத்திச் சிறப்பித்துக் காலத்திற் கேற்ப அவ்வத் துறைகளையும் மாசு சேரா மலும் சேர்பவைகளைப் போக்கிச் சீர் திருத்தியும் மக்களுக்குப் பயன் படும்படிச் செய்ய வேண்டுவதேயாகும். (ஆடலரசு)

தமிழ் மொழி இலக்கண இலக்கியச் செழுமை வாய்ந்த மொழி; நினைவிற் கெட்டாத மிகப் பழையகால முதற்கொண்டு இன்றளவும் தன் தகுதியிலும் செழுமையிலும் ஒரு சிறிதும் குறையாமல் உயிர்த்திருக்கும் மொழி!

தமிழரின் விழிப்பின்மையாலும், கடல் கோள் முதலிய இயற்கை இன்னல்களாலும் பல சிறந்த நூல்கள் மறைந்து விட்டன; எனினும், தமிழரின் தவப்பயனாய்த் தொல்காப்பியம் என்னும் முழு இலக்கண நூலும், திருக்குறள் என்னும் ஒப்பு உயர்வற்ற அற நூலும், சிலப்பதிகாரம் போன்ற சிறந்த இலக்கிய நூல்களும் கிடைத்திருக்கின்றன. உலகத்தின் முன்னிலையில் தமிழர் தலை நிமிர்ந்து நிற்க இவைகள் உதவுகின்றன.

இந்தியக் கல்வி அமைச்சர், இத்தகைய சிறப்புடன் தமிழ்மொழி திகழ்வதை நன்கு கவனித்திருக்கிறார் என்பது அண்மையில் இந்தியத் தலை நகரில் நடந்த அனைத்திந்திய இலக்கிய மாநாட்டின் திறப்புரையில் அவர் தமிழைப்பற்றிக் குறிப்பிட்டதிலிருந்து தெரிகின்றது.

இந்தி மொழி, நாட்டியல் மொழியானது 'சந்தர்ப்ப வசத்தால்' என்றும், வேறு வகையான வாய்ப்பு நிலவியிருந்தால், தென்னிந்திய மொழியொன்றே நாட்டு மொழியாகியிருக்கும் என்றும் 'சமஸ்கிருதமும்' தமிழும் இலக்கியச் செழுமை நிறைந்தவை யென்றும், தமிழில் பல சிறந்த இலக்கியங்கள் இருக்கின்றன வென்றும், அவை மிகத் தொன்மை வாய்ந்தவை யென்றும், மொழிகளின் தரம் அறிந்து அழகாகப் பேசியிருப்பது உள்ளத்தைக் கவர்கின்றது.

மொழிகளில் இலக்கண இலக்கியச் செழுமையும், தொன்மையும், இனிமையும், வளர்ச்சிக்கு ஏற்ற கருவும் உடையதாய், இன்றளவும் பேச்சு வழக்கோடு விளங்குவது தமிழ் மொழியொன்றே என்பதைக் காய்தல் உவத்தல் அகற்றி ஆராயும் அறிவுடைய எவரும் காணமுடியுமென்பதில் எள்ளள

இந்தியக் - - - - கல்வியமைச்சர் திறப்புரை

[முத்து]

வும் ஐயமில்லை. மேலும் அது, தென்னிந்திய மொழி யென்பது வெளிப்படை எனவே, வாய்ப்பு நேர்ந்திருந்தால், தென்னிந்தியர் தமிழ்மொழி நாட்டுமொழியாய் அதாவது நாவலந்தீவின் ஆட்சியாய்ப் பண்டுபோல் அமைக்கப் பெற்றிருக்குமென்று அமைச்சர் பேச்சிலிருந்து தெரிகின்றது; தமிழ்க்குத் தகுதியிருந்தாலும் தமிழர்க்கு விழிப்பின்மையால் வாய்ப்பு நழுவி விட்டது போலும்!

இந்தியாவில் ஒருவருக் கொருவர் உறவு கொள்ளவும், வருங்காலத்தில் நடு அரசின் ஆட்சி மொழியாகவும் ஆவதற்குரிய தகுதியில் இந்தி இனி வளர்க்கப்படவேண்டியிருக்கிறது; நாட்டு மொழி என்னும் வாய்ப்புப் பெற்று விட்டதனால், அது நன்கு வளர்க்கப்பட வேண்டுமென்று ஆட்சியினருங் கருதுகின்றனர்.

அதற்குத் தமிழில் உள்ள அடிப்படைக் கருத்துக்கள் பல உறுதுணையாயிருக்கும். மொழியில் விழிப்பின்மையா யிருக்கும் தமிழர், அதன் கருத்துக்களிலேனும் அவ்வாறில்லாமல் அவற்றைப் பன்மொழிகளின் வாயிலாகப் பரவவைத்து வருதல் நலம் பயக்கும். முதன் முதலில் திருக்குறள் இந்தியில் நன்முறையில் மொழி பெயர்க்கப்பட்டு நாட்டில் பரவுதல் இன்றியமையாததாம்.

நல்ல வாய்ப்பு! எளிய ஏற்பாடு!

முருகவேள் பன்னிரு திருமுறைகள்

பதிப்பாசிரியர் : ராவ்பகதூர் தணிகைமணி
திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. அவர்கள்.

வெளியீட்டுக் குறிப்புகள்

1. 10–4–'51 க்குள் மாம்பாக்கம் குருகுலத்தில் (மதுராந்தகம் அஞ்சல்) ரூ. 1 செலுத்தித் தம் பெயரைப் பதிவு செய்து கொள்வோர்க்குப் பகுதி ஒன்று ரூ. 1¼ விலைக்குக் கிடைக்கும்; அஞ்சல் செலவு வேறு.
2. திரும்பப் பதிப்பிடுவது எளிதன்று; கடித விலையும் கால நிலையும் கடுமையாயிருத்தலால், அளவாகவே நூல்கள் அச்சிடப்பெறும்.

அன்பர்கள் முந்திக்கொள்வது நல்லது; தமக்குத் தெரிந்தவர்களை இதில் ஈடுபடுத்துதல் உதவியாகும்.

குருகுலத்தார்.

குறிப்பு :—கடிதம் எழுதல், தொகை அனுப்பல், நூல்கள் பெறுதல் முதலிய இதன் தொடர்பான எல்லாவகையான செய்கைகளும், 'குருகுலம், மாம்பாக்கம், மதுராந்தகம் அஞ்சல்' என்னும் முகவரிக்கே செய்துகொள்ளவேண்டும்.

- பசியின் முன் -

[பா. வரதராசனுர்]

அண்மையில் புத்தாண்டு நாளன்று திருத்தணிகைக்குச் சென்று தணிகை முருகனை வழிபடும் பேறு கிடைத்தது. அழகனின் வழிபாட்டை முடித்துக்கொண்டு மலையினின்று இறங்கி வந்துகொண்டிருந்தோம்.

படிகளின் இரு மருங்கிலும் இரப்போர் வரிசையாக அமர்ந்து கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். தமிழ் நாட்டுத் திருக்கோயில்களின் தனிச் சிறப்பான காட்சி அல்லவா இது!

உடன் வந்து கொண்டிருந்த ஒரு பெரியார் சில செப்புக்காசுகளைக் கையில் ஏந்தி, "பாத்திர மறிந்து" நல்கி வந்தார். இடையே ஒரு சிறுமி, தன் இனத்துக்கே இயல்பான உடையிலும் கோலத்திலும் காட்சி யளித்தாள். அவள் இடக்கை ஊனமடைந்து காணப்பட்டது. அதாவது மணிக்கட்டு இயல்பற்ற முறையில் வளைந்தும் விரல்கள் மடங்கி உள்ளங்கையை நோக்கிப் படிந்தும், காணப்பட்டன. வருவோர் போவோரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அச் கையை முன் நீட்டி "சாமீ" "ஐயா" என்று தழுதழுத்த குரலில் இரந்து வந்தாள்.

மேற்சொன்ன பெரியார் அச் சிறுமியை அணுகியதும் அவளைக் கூர்ந்து நோக்கியபின், "உன் கைக்கு என்ன வந்தது. அதை ஒழுங்காக வைத்துக் கொள்ளாத வரை நான் உனக் கொன்றும் கொடேன்" என்று சொன்னார்.

என்ன வியப்பு! அச் சிறுமி சிறிது தாழ்ந்த, ஊன மடைந்ததைப்போல் காணப்பட்ட கையை ஒழுங்காக நீட்டினாள். உண்மையில் அக் கைக்கு யாதொரு பழுது மில்லை! அப் பெரியார் ஒரு செப்புக் காசை எறிந்து "இந்த வயதில் இப்படிப் பொய்யாக நடக்கலாமா? நீ உண்மையைத் தெரிவித்ததற்காக இந்தக் காசைத் தருகிறேன். இனி, பொய் சொல்வதை விடு" என்று சொல்லி அகன்றார்.

ஆனல் அச் சிறுமியோ மறுபடியும் பழைய நிலைக்குத் திரும்பி, தன் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டாள்.

அப் பெரியாரது உள்ளம் சாலச் சிறப்புடையதெனப் புலப்பட்டது. அற நோக்கும்; மெய்ந்நெறியும் மேற்கொண்டதெனத் தெளிவுற்றது. அச் சிறுமியின் நிலை அவரைத் துன்புறுத்தி இருக்கவேண்டும்.

ஆனல் ஒரு நொடி உண்மைக்குத் திரும்பிய அச் சிறுமி உரிய நேரத்தில் தன் இயல்பில் பின்னடைந்ததை எண்ணப் பெரிதும் துன்பமாயிருக்கின்றது. பொய்மை—தீமை—வென்றது. உண்மை ஒரு நொடி எழுந்து மறுபடியும் வீழ்ச்சி யுற்றது. காற்றுவாக்கில் அடித்துச் செல்லப் பட்டு மறைந்து விட்டது.

* *

அச் சிறுமி கிடக்கட்டும்; உலக மறியாதவள்; உண்மைக்கும் பொய்மைக்கும் வேற்றுமை உணராதவள். அவள் எங்ஙனம் அப் பெரியாரை அறிந்து கொள்ள முடியும். ஆனல் அவள் இனத்தில் வயிறு ஒன்றையே "உண்மையாக" அறிந்த வயது வந்தவர்களை எண்ணுவோம்; எத்துணைப் பேர் இத் தொழிலில் ஈடு பட்டுள்ளார்கள்.

"மானம் குலம், கல்வி வண்மை
அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி
தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற்
காமுறுதல் பத்தும்
பசிவந்தி டப்பறந்து போம்"

என்பது ஔவையின் நல்வழி.

பசியின் தோழனுகிய வறுமையைப் பிறப்புரிமையாகக் கொண்ட புலவரினத்தைச் சார்ந்தவரல்லரோ ஔவை! பழக்கத்திலிருந்து வந்த உண்மை!

எனவே வறுமையால், பசியால் வாடும் கூட்டத்தை நாம் எங்ஙனம் திருத்த முடியும். பசி மிகுந்துள்ள நாட்டில், பசி மிகுந்துள்ள காலத்தில், பசி மிகுந்துள்ள மக்களிடையே, நேர்மை, ஒழுங்கு, உண்மை முதலியவற்றை நாம் எங்ஙனம் எதிர்பார்க்க முடியும். அம் மக்களிடையே நாம் பேசும் பேச்சு, எழுதும் எழுத்து அத்தனையும் வீண். நம் முயற்சிகள், அழகிய வாக்கியங்கள், இனிய பேச்சுகள், கால் கோளற்ற கட்டிடம் எவ்வளவு அருமையானதாகவும், அழகிய 'பூச்சு' வேலைகள் முதலியன நிறைந்த கலைக் கோயிலாகவும் அமைக்கப்பட்டிருந்தாலும் வெகு விரைவில் தரை மட்டத்தைக்காணும் இயல்புடைத்தாதலை ஒக்கும்.

இதோ ஒரு படிப்பினை!

இடிந்து சிதைந்து கொண்டிருக்கும் சமூகத்தை வெற்றுரைகளாலும் ஆடம்பரப் பேச்சுகளாலும் திருத்த முற்படுவதோடு, செயலிலும் இறங்கி ஆக்கப் பணிகளில் ஈடுபடுவோம். தமிழர் நாகரிகம் என்றும் நிலைபெற்று நிலவ, அதன் அடிப்படையில் உற்ற புல்லுருவிகளைக் களைந்து வண்மைப் படுத்துவோம்.வரலாற்றின் படிப்பினை நமக்குத் துணை நிற்பதாக.

அமைதியற்று நாடு நாடாகத் திரிந்து வந்த பண்டை ஆசிய மக்கள், இந்தியாவின் வளமான வடபகுதியில் வசதியுடனும், வளத்துடனும் தங்கி அமைதிகொண்ட காலத்திலே தான் அரசும் நீதியும் அவர்களிடையே ஓங்கின; நாகரிகம் கற்றனர். தென்னுட்டிலும், காவிரியும் மற்ற ஆறுகளும் பாயும் இடங்களிலே தான் அறம் மிகத் தோன்றி உலகுக்கு நாளும் வழிகாட்டி வருகின்றது. பண்டைத் தமிழரின் நீடித்த,வளமான வாழ்க்கை தான், ஒருமைப் பாட்டுக்கும் விழுமிய அற வாழ்வுக்கும் கால் கோளாயிற்று.

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி !

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை,
மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம் :

கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தேரு, சென்னை 1.

- - தூய்மை - -

(வே. இரகுநாதனர்)

தூய்மை என்பது இருவகைப்படும். அது அகத்தூய்மை, புறத்தூய்மை என்பதாம். இவ்விரண்டும் ஒன்றினை யொன்று ஒட்டி வருவது.

ஆரம்ப நிலையிலே, மனதில் தூய்மையான எண்ணங்கள் எழ, புறத்தூய்மை இன்றியமையாதது. தூய்மையான சூழ்நிலையில் உள்ள மாறுபட்ட ஒருவன், தன்னிலைக்கு வெட்கி, உடன் தானும் தூய்மையாக முயற்சி செய்வான். இதை யொட்டியே 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' என மொழியப்பட்டது.

கயவர்களின் இடையில் அகப்பட்ட நல்லோன், தன் மனம் புண் படும்படியான நிகழ்ச்சிகளை மட்டும்தான் எதிர்பார்க்கலாம். அதனைற்றான் 'தீயாரைக் காண்பதும் தீதே' எனக் கூறினர்.

ஆக, முதன் முதல் சூழ்நிலை நல்லதாகவேண்டும். பின்னர், புறத்தூய்மைகளைக் கைக்கொண்டு ஒழுக வேண்டும். எங்களூரில் ஒருவர் நன்கு உடம்பு தேய்த்துக் குளிப்பார். அவரது தந்தையார் அவரை நோக்கி, "இவ்வளவு நேரம் தேய்த்தாயே உன்ளழுக்கு நீங்கிற்ரு" என அவர் காணும்போதெல்லாம் வினவுவார்.

யோகி வேமன்னர், 'அகத்தூய்மையற்ற புறத்தூய்மை' ஏன்? கடவுள் வழிபாடுதான் எதற்கு' என்கிறார்.

இதனைலெல்லாம் நாமறிவது அகத்தூய்மை கலந்த புறத்தூய்மை வேண்டுமென்பதே. இதற்கு, முதன் முதலில், வேடம் வேண்டியதே. மனப் பண்பாடு உற்ற காலத்தில், விழிப்படைந்த நிலையில் அகத்தூய்மை நன்கு பெற்று விட்டபின், வேடத்தைப் பற்றி நினைக்க வேண்டுவதே இல்லை. வேடம் பூணும் ஒருவன் அந்த சமயநெறிக்கான குறிக்கோள்களையும் கட்டுப்பாடுகளையும் ஓரளவாவது தெரிந்து கொள்ளவும், தெரிந்து கொண்டதில் ஓரளவாவது முயற்சி செய்யவும் முயலுகிருன்.

அத்துறையில் இணக்கமும் ஈடுபாடும் நேர்மையாய் உண்டாயின், அவன் முன்னுக்கு வந்திடுவன். இல்லையேனும் 'கீதை'யின் வாக்குப்படி அது வீண்போகாது.

புலால் உணவு, புகை குடித்தல் முதலான தீய பழக்கங்கள் கொண்ட ஒருவன் வேடம் பூணுவனேல், அதற்கொப்ப எப்படியாவது அத் தீப் பழக்கங்களை ஒழிக்க முயலுவான்,

துரியாதீத நிலைகொண்ட ஞானிகள் 'கோயிலாவதேதடா குளங்களாவதேதடா, கோயிலும் மனத்துளே, குளங்களும் மனத்துளே' எனவும், 'மார்வ மென்னும் கோயிலமைத்து மாதவ னென்னும் தெய்வத்தை நாட்டி, ஆர்வ மென்னும் பூவிட' வேண்டுமென்றும் கூறி யுள்ளார்கள். அன்னர் எக்காலத்தும் இடைவிடாது ஒழுகும் தைல தாரையைப் போன்று இறைவனின் இணையடிகளிலே மனத்தைச் செலுத்தி, ஞானங் கனிந்த நலங்கொண்டு நாடொறும் நைபவர்.

அவர்களைப் பின்பற்றி நாமும், அவர் மொழிந்தவற்றை மட்டும் கூறி. ஞானிகளே இப்படிச் சொல்லி இருக்க, நமக்கெல்லாம் பூசை, புனஸ்காரம், கோயில் குளம், ஆசார அனுஷ்டானம், வேடம் இவை யெல்லாம் எதற்கு எனக் கூறுகிறேம். மக்களுக்கு எடுத்து ஓதுகிறேம்.

உலகின்கண் நாம் உழல்வதற்கு முதற்காரணம் அவா. அதை யொட்டிதான் மற்றைய குணங்கள் உண்டாகின்றன. அவாவினல் பற்று ஏற்படுகிறது. அப் பற்றுக்கொண்டு, உடம்போம்பவும், உயிர் வாழவும் பல்வேறு வினைகளைச் செய்யவேண்டி யுளது. அப்படி அவ் வினைகளில் மனதைச் செலுத்துங்கால், ஆண்டவன் மீது மனது செல்வது அருமையே யாகும். வினைகளிலேயே மூழ்கி இருக்கும் மக்கள் மனத்தை ஒரு சிறிது கடவுள் பால் செலுத்தவும், வினைகளினல் விளையும் இன்ப துன்பங்களை மறந்து மன ஒருமைப்பாடடையவும், மாணவ இல்லற அறங்களை ஒழுங்காய் நடத்தவும், கோயில் குளம் முதலிய அனைத்தும் இன்றியமையாதனவே

பின்னர், நிலைகளில் உள்ளம் பண்பட்டு மென்மேலும் உயர்வடையக் காரணமா யிருக்கும் புறத்தூய்மையும், வேடத்தையும் அகத்தூய்மையையும் கைக்கொள்ளச் செய்யப் பெரியோர்கள் பாடுபடவேண்டும். கீதையில் கண்ணன் "பிறர்பின் பற்றுவான் வேண்டியே, கடந்த நிலையிலுள்ள நான்கூட உலகத்தோடொட்டொழுகுகிறேன்" எனச் சொல்லியிருப்பதுடன் தானும் செய்து காட்டியதுபோல், பெரியோரும் ஞானிகளும் கூடப் பிறர் நற்குண நற்செய்கைகளில் உயரவும், நல்லொழுக்கங்களில் மிளிரவும், தாமும் நியம நிட்டைகளைக் கைக்கொள்ளல் வேண்டும்.

தற்போதைய உலகில் ஊழல்கள் தான் மிக்குள. குறுகிய மனப்பான்மையும், தான் பிறரைத் தாழ்மைப்படுத்தி உயர முயலுவதும் லஞ்ச ஊழலும், பதவி மோகமும், அதிகார ஆசையும், இச்சகம் பேசலும் மிகுந்து காணப்படுகின்றன. இஃது இப்படியே நீடித்துக்கொண்டு போனல் மிகமிக மோசமாகவே முடியும். இதிலுள்ள குறைகளையும் தவறுகளையும் நன்கு மக்கட்கு எடுத்தோதும் வீரத் தியாகிகள் வேண்டும்.

எதிர்காலத்திலாவது இன்ப உலகம் நிகழட்டும். மக்களெல்லாம், மனமெய்மொழிகளில் மாறுபாடின்றி அக, புறத்தூய்மைகளுடன் விளங்கவும், எங்கும் எவரும் எப்போதும் எந்நிலையிலும் மனமாசு நீங்கி மாண்புபெறவும், எங்கும்நிறைந்தபரம்பொருள் ஏற்ற வழிசெய்ய இறைஞ்சுவோமாக!

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD, COIMBATORE.

20 MAR 1951
MADRAS

"முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,
உரிய விலையில்,
பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
சுவைப் பண்பில், பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;
ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.
இசைந்த முன்பணத்துடன்
தேவைக்கு எழுதுக!

விளம்பரத் திட்டம்

உள் பக்கம் :

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. $1\frac{1}{2}$. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம் :

முழுப் பக்கம்	ஒரு தடவைக்கு		ரூ. 30
அரைப் பக்கம்	,,	,,	ரூ. 16
ஒரு பத்தி	,,	,,	ரூ. 12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப் பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,
திருக்குறள் மறைக்குச்
செய்கை நிலையம்.

நாட்டு மக்கள், 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை!

குருகுலத்தில் உணவு விடுதி

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்து கொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றுந் திறந்திருக்கின்றது!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)